A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 24 / 2023**

திரு A. மாயகிருஷ்ணன்,
த/பெ. அழகு கோனார்,
அயன் கரிசல்குளம், மாவிப்பட்டி அஞ்சல்,
தூத்துக்குடி – 628 202.

………மேல்முறையீட்டாளர்
(திரு A. மாயகிருஷ்ணன்
Rep. by திரு R. மோகன்குமார், வழக்கறிஞர்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர் / விநியோகம்/புதூர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2, 18, நாடார் உறவின்முறை கட்டிடம்,
விவேகானந்தா தெரு, புதூர் – 628 905.

2. உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/விளாத்திகுளம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS வளாகம், விளாத்திகுளம் – 628 907.

3. செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு D. செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/விளாத்திகுளம்
திரு S. முத்துராஜ், செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/தூத்துக்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 05-04-2023**

**கேட்புரை நாள்: 14-06-2023**

**ஆணை நாள்: 10-07-2023**

05.04.2023 அன்று பெறப்பட்ட திரு A. மாயகிருஷ்ணன், த/பெ. அழகு கோனார், அயன் கரிசல்குளம், மாவிப்பட்டி அஞ்சல், தூத்துக்குடி – 628 202 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 24/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 14.06.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது பட்டா நிலத்தில் நடப்பட்டுள்ள மின்கம்பங்களை அகற்றுமாறும், தகுந்த இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனக்கு பாத்தியப்பட்டுள்ள நிலத்தில் மின்வாரியத்தால் நடப்பட்டுள்ள மின்கம்பங்களை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்ட எதிர்மனுதாரர் மின்கம்பங்களை DCW மூலம் அதற்குண்டான தொகை செலுத்தினால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மின்கம்பங்களை மாற்றி அமைக்ககோரி மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.07.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் 26.09.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 26.09.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரரின் மனுவை இம்மன்றம் இன்று 12.09.2022-ல் கூடி மனுதாரர் தரப்பு கோரிக்கைகளையும், வாரிய தரப்பு பதில்களையும் ஆய்வுசெய்து மனுதாரர் தெரிவித்த நிலத்தில் ஏற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையினை அதே அமைப்பு நிலையில் (Existing LT Line) மின் கம்பங்கள் மாற்றி புதிய மின்மாற்றி தமிழ்நாடு மின்சார சட்டம் பிரிவு 164-ன்படி இந்திய தந்தி தொலைத்தொடர்பு சட்டம் 1885-ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களை கொண்டு மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் விரும்பினால் தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(6)ன்படி ஏற்கனவே அமைக்கப்பட்ட (EXISTING STATUS LT LINE) தாழ்வழுத்த மின்பாதை மற்றும் மின் கம்பங்களை மாற்றியமைக்க உரிய விண்ணப்பம் மற்றும் அதற்குரிய தொகை செலுத்தினால் மட்டுமே தமிழ்நாடு மின்சார வாரிய நடைமுறை செயலாக்க விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மனுதாரர் அனுமதியின்றி ஊன்றப்பட்டுள்ளதாக தெரிவித்த மின்கம்பங்கள் அமைந்துள்ள பட்டா நிலத்தின் நில அளவீடுகள் வரையறுக்கப்பட்ட வருவாய் துறை உரிமை சான்று ஆவனங்களை உடனே வழங்கவும் அதன் தொடர்ச்சியாக களஆய்வு மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்க இயலும் என்று இம்மன்றம் உத்திரவிட்டு இம் மனுவை முடித்து வைக்கிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.06.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு A. மாயகிருஷ்ணன் மற்றும் திரு R. மோகன்குமார், வழக்கறிஞர் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு D. செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/விளாத்திகுளம் மற்றும் திரு S. முத்துராஜ், செயற்பொறியாளர் /

விநியோகம்/ஊரகம்/தூத்துக்குடி, தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மாவட்டம் (அஞ்சல் குறியீட்டு என். 626202) எட்டையபுரம் தாலுக்கா மாவில்பட்டி அஞ்சல் அயன்கரிசல்குளம், திரு. அழகுகோனார் என்பவரின் மகனாகிய மாய கிருஷ்ணன் வயது 47/2023 இந்த முகவரியில் நிரந்தரமாக குடும்பத்துடன் வசித்து வருவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி தானும் தனது குடும்பத்துடன் எட்டையபுரம் வட்டம் அயன்கரிசல்குளம் கிராம நிர்வாக எல்லைக்கு உட்பட்ட புல என்.443/1A, 443/1B, 443/2A, 443/2B மற்றும் 207/1, 207/3 ஆகிய புல எண்களில் தனது தகப்பனார் மற்றும் தனது தாயார் மற்றும் தனது பெயரில் பட்டா உள்ளதாகவும், இதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், முறையாக தங்களிடம் அனுமதி பெறாமல் மற்றும் எவ்விதமான தகவலும் தெரிவிக்காமல் தங்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதூர் மூலம் மின் கம்பங்கள் நட்டு உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இது தொடர்பாக இந்த புகாரின் மனுதாரரும் பாதிக்கப்பட்ட நபரும் ஆகிய அவர் மேற்கண்ட எதிர்மனுதாரர்களுக்கு எழுத்து பூர்வமாக மின் கம்பத்தை மாற்றி நடவேண்டி பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியிருந்ததாகவும், தனது மனு தொடர்பாக திரு. கண்ணன் அவர்கள் (இளநிலை பொறியாளர்), இளமின் பொறியாளர், அலுவலகம், விநியோகம் தமிழ்

நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதூர், தூத்துக்குடி 628905 அவர்களின் அலுவலக கோப்பு எண். க.என். உமிபொ/விபுதூர் /கோ/கட்டு/CA/அ.என்.538/2021 நாள் 11-10-2021 மூலம் தனது கடிதத்திற்க்கு பதில் கொடுத்து இருந்தார்கள் எனவும், அவர்களின் பதில் தனக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதாலும் எதிர் தரப்பினர் சட்டத்தை பின்பற்றாமல் அவர்கள் செய்த தவறினை மறைக்கும் நோக்கில் பதில் கொடுத்து உள்ளார்கள் எனவும், மேலும் பிரதிவாதி 1 அவர்கள் மனுதாரர் ஆகிய தன்னிடம் மின் கம்பத்தை மாற்றி நட ரூபாய் 50,000/- லஞ்சமாக கேட்டதாகவும் (புகாரினை நிருபணம் செய்ய மனுதாரராகிய தான் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்) அதனை அவர் கொடுக்க மறுத்ததால் மனுதாரரை வேண்டுமென்றே அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் அவர்கள் கொடுத்த கடிதத்தில் தங்களின் நலன் கருதி என்று சொல்லி உள்ளார்கள் எனவும் தாங்கள் இந்த இடத்தில் மின் மாற்றி அமைக்க வேண்டும் என்று தாங்கள் எந்தவிதமான கடிதபோக்குவரத்தும் கொடுக்கவில்லை மற்றும் மின் மாற்றி வேறு இடத்தில் வைக்க வேண்டுமெனில் தான் அதற்க்கு கட்டணம் கட்டவேண்டும் என்று சொல்வது அதிகாரிகள் அவர்களின் கடமையை செய்ய மறுக்கும் (இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 166A) செயலாகவே உள்ளது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இந்த இடத்தில் வைத்த அதிகாரிகள்தான் அதனை மாற்று இடத்தில் வைக்க வேண்டுமே தவிர அதற்கு மனுதாரர் ஆகிய தான் எவ்வாறு கட்டணம் செலுத்த முடியும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் அலுவலக கடித எண் உமிபொ/வி/புதூர் /கோ/கட்டு/CA/அ.எண். 637 / 2021 நாள் 24-11-2021 மூலம் இனிவரும் காலங்களில் தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும் என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது மனுதாரரை ஏமாற்றும் நோக்கில் உள்ளது எனவும், இதன் மூலம் எதிர் தரப்பினர் ஆகிய அதிகாரிகள் சட்டத்தை பின்பற்றவில்லை என்பது தெள்ளதெளிவாக தெரிகின்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சட்டப்படியான விசாரணை முறையின்றி அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார்கள் சட்ட விரோதமாக செயல்பட்டு உள்ளார்கள் இதனால் சம்பந்தப்பட்ட தாவா சொத்தில் மின் அதிகாரிகள் இடையூறாக நடுவில் மின்

கம்பம் நட்டு உள்ளதால் விவசாயம் செய்யமுடியாமல் நாளது தேதிவரையில் உள்ளதாகவும் இதனால் முறையாக தங்களுக்கு விவசாய நிலம் இருந்தும் அதில் விவசாயம் செய்யமுடியாமல் உள்ளதாகவும் ஏனெனில் தாவா சொத்தில் மின்கம்பம் உள்ளதால் தண்ணீர் விட்டு விவசாயம் செய்யமுடியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அரசு தங்களுக்கு சொந்தமான இடத்தில் கம்பம் நடவேண்டும் என்னும் பட்சத்தில் அதற்கு உண்டான இழப்பீடு வழங்க வேண்டும் அவ்வாறு நாளது தேதிவரையிலும் வழங்கவில்லை என்பது அதிகாரிகளின் அதிகார துஷ்பிரோயோக செயலாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 இது தொடர்பாக தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்து தனது புகார் தொடர்பாக மன்றம் தெரிவித்துள்ள உத்தரவு ஏற்றுக்கொள்ளும் படி இல்லை ஏனெனில் மனுதாரர் ஆகிய தான் பிரதிவாதி 1 அவர்கள் மீது லஞ்சம் தொடர்பாக புகார் செய்துள்ளதாகவும், அதனை தகுந்த சாட்சிகளுடன் நிருபணம் செய்ய தயாராக இருந்தபோதிலும் மன்றமானது அதிகாரிகளுக்கு ஆதரவாக செயல்படுவது ஏற்றுக்கொள்ளும் படி இல்லை எனவும், மன்றமானது பாதிக்கப்பட்ட நபர்களுக்குதானே தவிர அதிகாரிகளை காப்பாற்றும் நோக்கில் செயல்படக்கூடாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் மன்றத்தின் விசாரணை மற்றும் உத்தரவு நேர்மையானதாகவும் நியாயமானதாகவும் இல்லை மேலும் மன்றத்தின் விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு இந்திய தந்தி சட்டம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்திய தந்திசட்டப்படி எந்த பிரிவுகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றி தகவல் இல்லை எனவும் அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவு எடுக்க வழிவகை இல்லை என்பதை மதிப்பு மிகுந்த ஆணையத்தின் கவனத்திற்கு தெரியப்படுத்துவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் பட்டா நிலத்தில் அரசு அதிகாரிகள் பட்டாதாரரின் அனுமதியின்றி தன்னிச்சையாக செயல்படுவது மனித உரிமை மீறல் என்று மாண்புமிகு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் SA 3993 / B / 17 என்ற வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் இந்த வழக்கிற்கும் பொருந்தும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே தனது புகாரினை கருத்தில் கொண்டு நீதியின் நோக்கம் நிறைவேறவும் சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள மின்கம்பத்தினை வேறு இடத்தில் நடவும் விதிமுறைகளை பின்பற்றாத எதிராளிகள் மீது துறைரீதியில் நடவடிக்கை எடுக்கவும் பாதிக்கப்பட்ட தனக்கு தகுந்த இழப்பீடு வழங்கி ஆணை பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுகா, மாவில்பட்டி அஞ்சல், அயன்கரிசல்குளம், திரு அழகு கோனார் என்பவரின் மகனாகிய திரு அ.மாயகிருஷ்ணன் நிரந்தர முகவரியில் குடியிருந்து வருவதாகவும், தனது தந்தை தாயார் மற்றும் தனது பெயரில் உள்ள சர்வே எண் 443/1A, 443/1B, 443/2A, 270/1, மற்றும் 270/3 கொண்ட பட்டா நிலங்கள் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுகா, அயன்கரிசல்குளம் கிராம எல்லையில், 100 கே.வி.ஏ திறன் கொண்ட மின் மாற்றி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் 25 ஆண்டுகளுக்கு முன்பே நிறுவப்பட்டு அந்த பகுதியில் உள்ள 150 எண்ணம் வீட்டு குடியிருப்பு உபயோகங்களுக்கும், 15 எண்ணம் கிராம பஞ்சாயத்து குடிநீர் பயன்பாட்டிற்கும், 20 எண்ணம் விவசாய மின் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி மின்மாற்றியின் பயன்பாட்டில் உள்ள ஊர் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மின்சாரம் தடையின்றி சீராக வழங்கும் பொருட்டு மின்வாரியத்தின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின் பாதையினை போதுமான பாதுகாப்பு இடைவெளியுடன் கூடிய உயரழுத்த மின் பாதையாக மாற்றி புதிய மின் மாற்றி நிறுவப்பட்டுள்ளது. இதனால் அந்த பகுதியில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த தமிழ்நாடு அரசின் மானியத்தின் கீழ் இருக்க கூடிய இலவச மின்சார விவசாயிகளுக்கு சீரான மின்சார விநியோகம் தடையின்றி வழங்கப்பட்டு உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு. A.மாயகிருஷ்ணன், அயன்கரிசல்குளம் அவர்களின் மனுவில் கூறப்பட்டுள்ள பட்டா நிலத்தினை நேரடி கள விசாரணை செய்த போது மனுதாரர்

தெரிவித்த நிலத்தில் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டு சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையினை அதே அமைப்பு நிலையில் (Existing LT Line) மின் கம்பங்கள் மாற்றி புதிய மின்மாற்றி தமிழ்நாடு மின்சார சட்டம் பிரிவு 164–ன்படி, இந்திய தந்தி தொலைத்தொடர்பு சட்டம் 1885–ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களை கொண்டு மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் திரு அ.மாய கிருஷ்ணன் த/பெ. அழகு கோனார் அவர்கள் எதிர் மனுதாரர் ஆகிய இள நிலை பொறியாளர் /விநியோகம் /புதூர் அலுவலகத்திற்கு அளித்த நாளிட்ட 04.10.2021 மனுவிற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதூர் பிரிவு பொறியாளர் க.எண் :உமி பொ/வி/புதூர்/கோ.கட்டு/CA/அ.எண் :538/2021 நாள் 11–10–2021 மூலம் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் பிரதிவாதி 1 அவர்கள் மனுதாரரிடம் மின்கம்பத்தை மாற்றி நட ரூபாய் 50,000/– லஞ்சமாக கேட்டார் என்ற புகாருக்கு தனியாக புகார் மனு அளிக்கவும், புகாரினை நிருபணம் செய்ய மனுதாரர் ஆவணங்களை அளித்தால் உரிய விசாரணை செய்து விசாரணையின் முடிவில் சம்பந்தபட்ட பணியாளர் மீது குற்றம் உறுதிபடுத்தப்பட்டால் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரர் திரு அமாய கிருஷ்ணன் தபெ அழகு கோனார் . அவர்கள் எதிர் மனுதாரர் ஆகிய இள நிலை பொறியாளர் விநியோகம் புதூர் அலுவலகத்திற்கு அளித்த 20.10.2021 நாளிட்ட மனுவிற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் புதூர் பிரிவு பொறியாளர் க.எண் உ.மி பொ/விபுதூர்/கோ.கட்டு|CAஅ.எண் :637/2021 நாள் 24–11–2021 மூலம் பதில் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரர் திரு.அ.மாய கிருஷ்ணன் தபே அழகு கோனார் அயன் கரிசல் குளம் . மாவில்பட்டி அஞ்சல் · தூத்துக்குடி 628202, அவர்கள் தனது தந்தை தாயார் மற்றும் தனது பெயரில் உள்ள சர்வே எண் 443/74, 443/78,943/24,270/1 270/3 கொண்ட பட்டா நிலங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் புதூர் மூலம் மின்கம்பங்கள் நட்டு உள்ளதாகவும் அதனை மாற்றிட வேண்டிய கோரிக்கையின் மீது விசாரணை மேற்கொண்டு மனுதாரருக்கு நீதி வழங்க மின் நுகர்வோர் குறை தீர்க்கும்

மன்றத்தில் எழுத்து பூர்வமாக பெறப்பட்ட புகார் மனுவிற்கு மன்றத்தின் விசாரணை 12-09-2022 அன்று மாலை 3.00 மணியளவில் நுகர்வோர் முன்னிலையில் தலைவர்,மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், மற்றும் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில், வாரிய தரப்பு பொறியாளர்கள் கொண்டு நடை பெற்றதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இருதரப்பு நடவடிக்கை நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் அளித்த தீர்ப்புரையில் மனுதாரர் தெரிவித்த நிலத்தில் ஏற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையினை அதேஅமைப்பு ன் படி நிலையில் (Existing LT line) மின் கம்பங்கள் மாற்றி புதிய தமிழ்நாடு மின்சார சட்டம், பிரிவு 164 – ,இந்திய தந்தி தொலைத் தொடர்பு சட்டம் 1885 ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களை கொண்டு மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் விரும்பினால் தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5 (6) ன் படி ஏற்கனவே அமைக்கப்பட்ட (EXISTING STATUS LT LINE) தாழ்வழுத்த மின்பாதை மற்றும் மின்கம்பங்களை மாற்றி அமைக்க உரிய விண்ணப்பம் மற்றும் அதற்க்குரிய தொகை செலுத்தினால் மட்டுமே தமிநாடு மின்சார வாரிய நடைமுறை செயலாக்க விதி முறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். எனவும் மனுதாரர் அனுமதியின்றி ஊன்றப்பட்டுள்ளதாக தெரிவித்த மின்கம்பங்கள் அமைந்துள்ள பட்டா நிலத்தின் நில அளவீடுகள் வரையறுக்கப்பட்ட வருவாய் துறை உரிமை சான்று ஆவணங்களை உடனே வழங்கவும் தொடர்ச்சியாக கள ஆய்வு மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்க இயலும் என்று மன்றம் நடவடிக்கை அதன் 1358/மே.பொ/தூ.மி.ப.வ/ம்.தொ.அ/உ.பொ/ஆ.ர்.இ.இ/2022/நாள் 26-09-2022 எண் அன்று நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தால் தீர்ப்புரை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் திர்ப்பு உத்தரவு நேர்மையானதாகவும் நியாயமானதாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மின்சார சட்டம் 164-ன் படி,இந்திய தந்தி தொலைத்தொடர்பு சட்டம் 1885 -ல் தெளிவுற கூறப்பட்டுள்ளது. இதன் உத்தரவு தமிழ்நாடு அரசு ஆணை எண்:16 நாள் 23-02-2012 ன் மூலம் வெளியிடப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 இந்நடவடிக்கையின் தொடர்ச்சியில் மனுதாரர் அனுமதியின்றி ஊன்றப்பட்டுள்ளதாக தெரிவித்த மின்கம்பங்கள் அமைந்துள்ள பட்டா நிலத்தின் நில

அளவீடுகள் வரையறுக்கப்பட்ட வருவாய் துறை உரிமை சான்று ஆவணங்களை உடனே வழங்கவும் அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்க இயலும் என்பதினை உ.செ.பொ/வி/ விளதை/ கோ.தனி/ வ.உ/அ.எண் : 845/2022 நாள்:07.10.2022 என்ற கடிதம் மூலம் மனுதாரருக்கு கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அக்கடிதத்தினை 18.10.2022 நாளன்று பதிவு தபாலினை மேல்முறையீட்டாளர் பெற்று கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு A. மாயகிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுக்கா, மாவில்பட்டி அஞ்சல் அயன்கரிசல்குளம் என்ற முகவரியில் நிராந்திரமாக குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், எட்டையபுரம் வட்டம் அயன்கரிசல்குளம் கிராம நிர்வாக எல்லைக்கு உட்பட்ட புல என்.443/1A, 443/1B, 443/2A, 443/2B மற்றும் 207/1, 207/3 ஆகிய புல எண்களில் தனது தகப்பனார் மற்றும் தனது தாயார் மற்றும் தனது பெயரில் பட்டா உள்ளதாகவும், இதில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், முறையாக தங்களிடம் அனுமதி பெறாமல் மற்றும் எவ்விதமான தகவலும் தெரிவிக்காமல் தங்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதூர் மூலம் மின் கம்பங்கள் நட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 மின் அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்பட்டு சட்ட விரோதமாக தனக்கு சம்பந்தப்பட்ட தாவா சொத்தில் இடையூறாக நடுவில் மின் கம்பம் நட்டு உள்ளதால் விவசாயம் செய்யமுடியாமல் நாளது தேதிவரையில் உள்ளதாகவும், இதனால் முறையாக தங்களுக்கு விவசாய நிலம் இருந்தும் அதில் விவசாயம் செய்யமுடியாமல் உள்ளதாகவும், ஏனெனில் தாவா சொத்தில் மின்கம்பம் உள்ளதால் தண்ணீர் விட்டு விவசாயம்

செய்யமுடியாமல் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். அரசு தங்களுக்கு சொந்தமான இடத்தில் கம்பம் நடவேண்டும் என்னும் பட்சத்தில் அதற்கு உண்டான இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு நாளது தேதிவரையிலும் வழங்கவில்லை என்பது அதிகாரிகளின் அதிகார துஷ்பிரோயோக செயலாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எனவே தனது புகாரினை கருத்தில் கொண்டு நீதியின் நோக்கம் நிறைவேறவும் சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள மின்கம்பத்தினை வேறு இடத்தில் நடவும் விதிமுறைகளை பின்பற்றாத எதிராளிகள் மீது துறைரீதியில் நடவடிக்கை எடுக்கவும் பாதிக்கப்பட்ட தனக்கு தகுந்த இழப்பீடு வழங்கி ஆணை பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான பட்டா நிலங்கள் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுக்கா, அயன்கரிசல்குளம் கிராம எல்லையில், 100 கே.வி.ஏ திறன் கொண்ட மின்மாற்றி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் 25 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டு அந்த பகுதியில் உள்ள 150 எண்ணம் வீட்டு குடியிருப்பு உபயோகங்களுக்கும், 15 எண்ணம் கிராம பஞ்சாயத்து குடிநீர் பயன்பாட்டிற்கும், 20 எண்ணம் விவசாய மின் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

7.6 மேற்படி மின்மாற்றியின் பயன்பாட்டில் உள்ள ஊர் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு மின்சாரம் தடையின்றி சீராக வழங்கும் பொருட்டு மின்வாரியத்தின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின் பாதையினை போதுமான பாதுகாப்பு இடைவெளியுடன் கூடிய உயரழுத்த மின் பாதையாக மாற்றி புதிய மின் மாற்றி நிறுவப்பட்டுள்ளதாகவும், இதனால் அந்த பகுதியில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த தமிழ்நாடு அரசின் மானியத்தின் கீழ் இருக்க கூடிய இலவச மின்சார விவசாயிகளுக்கு சீரான மின்சார விநியோகம் தடையின்றி வழங்கப்பட்டு உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளர் அவர்களின் மனுவில் கூறப்பட்டுள்ள பட்டா நிலத்தினை நேரடி கள விசாரணை செய்த போது மனுதாரர் தெரிவித்த நிலத்தில் ஏற்கனவே பல

வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டு சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையினை அதே அமைப்பு நிலையில் (Existing LT Line) மின் கம்பங்கள் மாற்றி புதிய மின்மாற்றி தமிழ்நாடு மின்சார சட்டம் பிரிவு 164–ன்படி, இந்திய தந்தி தொலைத்தொடர்பு சட்டம் 1885–ல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களை கொண்டு மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அந்த காலகட்டத்தில் உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.9 இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***
>
> *Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.10 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***“Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. ”*

7.11 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

7.12 மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான நிலத்தில் ஏற்கனவே 25 வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டு சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையினை அதே அமைப்பு நிலையில் மின்கம்பங்கள் மாற்றி நுகர்வோருக்கு தடையில்லா மின்சாரம் வழங்க உயரழுத்த மின்பாதை மூலம் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டதாகவும், மின்மாற்றி நிறுவப்பட்ட காலகட்டத்தில் ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

7.13 மேலும் விவசாய நிலங்கள் ஒன்றுக்கொன்று அடுத்தடுத்ததாக இருப்பதாகவும் ஒவ்வொரு நிலத்திற்கும் பொதுபாதை கிடையாது என்பதாகவும், மின்மாற்றி நடப்பட்ட

மின்கம்பம் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்ததாகவும், ஏற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதையை உயரழுத்த மின்பாதையாக மாற்றி அமைத்ததாகவும் எனவே மேல்முறையீட்டாளரின் நிலத்தில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் மின்கம்பங்கள் நடப்படவில்லை எனவும், வரப்பின் ஓரமாகவே மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் நிலத்தில் ஏற்கனவே சென்று கொண்டிருந்த தாழ்வழுத்த மின்பாதை கட்டமைப்பை உயர் மின் அழுத்த பாதையாக மாற்றியிருப்பது ஆவணங்களின் மூலம் நிரூபணமாகிறது. மேல்முறையீட்டாளர் அக்காலகட்டத்தில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, உரிமதாரர் செலவில் மின்பாதையை மாற்றியமைக்கக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

7.14 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

7.16 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும் பாதிக்கப்பட்ட தனக்கு தகுந்த இழப்பீடு வழங்கவும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும்

மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. ………………..*

*……………………*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

7.17 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஆணையிட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்ககான ஒழுங்குமுறை விதிகளில் வழிவகை இல்லை என்று தெரிகிறது.

7.18 மேல்முறையீட்டாளரின் நிலத்தில் நிறுவப்பட்ட மின்கம்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக மின்குறைதீர்ப்பாளரின் தீர்வுக்கு வராது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், மேல்முறையீட்டாளர் தனது வாதத்தில் இழப்பீடு வழங்குவதை தவிர்த்து மின்பாதையை மாற்றி அமைக்கும் முறையீட்டை மட்டும் வலியுறுத்துவதாக வாதிட்டார். இவ்வழக்கில் சேவை குறைபாடு இல்லை என்பதனால் அதற்கான இழப்பீடு வழங்க முகாந்திரம் இல்லை என்று தெரிய வருகிறது. எனவே, மேல்முறையீட்டாளரின் இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளரின் நிலத்தில் 25 வருடங்களுக்கு முன் நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை நுகர்வோருக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டி அந்த பாதையின் அமைப்பிலேயே உயரழுத்த மின்பாதை தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இன்படி நிறுவப்பட்டது தெரியவருகிறது. எனவே மின்பாதையை உரிமதாரர் செலவில் மாற்றி அமைப்பதற்கான மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

(ii) மேலும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 24/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு A. மாயகிருஷ்ணன், – BY RPAD
த/பெ. அழகு கோனார்,
அயன் கரிசல்குளம், மாவிப்பட்டி அஞ்சல்,
தூத்துக்குடி – 628 202.

2. உதவி மின்பொறியாளர் / விநியோகம்/புதூர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2, 18, நாடார் உறவின்முறை கட்டிடம்,
விவேகானந்தா தெரு, புதூர் – 628 905.

3. உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/விளாத்திகுளம்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV SS வளாகம், விளாத்திகுளம் – 628 907.

4. செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 131, 132, எட்டபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.